(6 pages) **Reg. No. :** ....................................

**Code No. : 5210** **Sub. Code : ZTLM 32**

M.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2022

Third Semester

தமிழ் — Core

இலக்கணம் III – தொல்காப்பியம் – பொருள் – I
(1 – 5 இயல்கள்)

(For those who joined in July 2021 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. முந்நீர் என்பது

(அ) மூன்று நதிகளின் சங்கமம்

(ஆ) ஆற்றுநீர்

(இ) கடல் நீர்

(ஈ) புனித நீர்

2. திருமணம் நிகழும் வகைகள்

(அ) 1 (ஆ) 2

(இ) 3 (ஈ) 4

3. "மாண் நலம் தா என வகுத்தற் கண்ணும்"– இது யாருடைய கூற்று?

(அ) தலைவி (ஆ) காமக்கிழத்தி

(இ) தலைவன் (ஈ) தோழி

4. தோழி அறத்தொடு நிற்கும் நிலைகள்

(அ) 4 (ஆ) 5

(இ) 6 (ஈ) 7

5. குலதெய்வம் காக்க வேண்டிப் பாடுவது

(அ) வாயுறை வாழ்த்து (ஆ) செவியறிவுறூஉம்

(இ) புறநிலை வாழ்த்து (ஈ) கந்தழி

6. ஆற்றுப்படைக்கான இலக்கணம் கூறும் திணை

(அ) வெட்சி (ஆ) வாகை

(இ) தும்பை (ஈ) பாடாண்

7. காதலர் களவுறவை வாய்விட்டு வெளிப்படையாகப் பலரும் பேசுவது

(அ) கூற்று (ஆ) அலர்

(இ) அம்பல் (ஈ) உள்ளுறை உவமம்



*Nesamony Memorial Christian College, Marthandam*

8. எண்ணரும் பாசறை ———— புணரார்.

(அ) பரத்தையொடு (ஆ) மனைவியொடு

(இ) பெண்ணொடு (ஈ) தோழியோடு

9. மன்னுறு தொழில், தன்னுறு தொழில் எத்திணைக்குரியது?

(அ) வெட்சி (ஆ) கரந்தை

(இ) வஞ்சி (ஈ) காஞ்சி

10. புறப்பொருள் வெண்பாமாலையின் கரந்தைத் திணையின் துறைகளின் எண்ணிக்கை

(அ) 20 (ஆ) 12

(இ) 18 (ஈ) 14

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) அகத்திணையியல் சுட்டும் உள்ளுறை உவமத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) (i) "ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே"

(ii) "தானே கூறும் காலமும் உளவே" — விளக்குக.



12. (அ) கற்பியலில் வாயில்கள் பெறுமிடத்தைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) "வரைதல் வேட்கைப் பொருள என்ப" – ஆய்க.

13. (அ) உழிஞைப் போரின் எட்டு நிலைகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) "அகம் எழிற்குப் புறம் எழும் எங்ஙனம் ஒன்றாகும்" – இக்கூற்றினை நிறுவுக.

14. (அ) கருப்பொருள் கட்டமைப்பில் தொல்காப்பியமும் நம்பியகப்பொருளும் வேறுபடுமிடங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மரபு வளர்ச்சி என்றால் என்ன? ஏதேனும் ஓர் இலக்கியத்தில் அதனைப் பொருத்திப் பார்த்தி விளக்குக.

15. (அ) மரபு போற்றல் என்றால் என்ன? அதனைப் புற இலக்கியத்தில் சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) புறப்பொருள் வெண்பாமாலை தொல்காப்பியக் கட்டமைப்பிலிருந்து எங்ஙனம் வேறுபடுகின்றது?



*Nesamony Memorial Christian College, Marthandam*

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) அகத்திணையியலில் இடம்பெறும் தலைமகன், தோழி கூற்றுக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) களவு காலத்தில் தலைவிக்கு நிகழும் கூற்றுக்களிலுள்ள செய்திகளை ஆராய்க.

17. (அ) அக இலக்கியம் படைக்கும் பொது நெறிமுறைகளை எடுத்தாய்க.

(அல்லது)

(ஆ) கற்பு காலத்தில் தலைவனுக்கு நிகழும் கூற்றுக்களை விளக்குக.

18. (அ) வெட்சி மற்றும் கரந்தைத் திணையின் போர் முறைகளை ஆய்க.

(அல்லது)

(ஆ) காஞ்சித் திணை என்றால் என்ன? அதன்அமைப்பினை எடுத்துரைக்க.

19. (அ) கற்புக் கோட்பாட்டில் தொல்காப்பியத்திலிருந்து நம்பியகப் பொருள் எங்ஙனம் வேறுபடுகின்றது? – ஆய்க.

(அல்லது)

(ஆ) அகப்பொருள் இலக்கணக் கட்டமைப்பில் நம்பியகப் பொருளும் தொல்காப்பியமும் ஒன்றுபடும் இடங்களைத் தெளிவுறுத்துக.



20. (அ) பாடாண் திணைக் கட்டமைப்பில் தொல்காப்பியமும் நன்னூலும் ஒன்றுபடும், வேறுபடும் இடங்களை ஆய்க.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியப் புறத்திணையில் ஏதேனும் ஒரு திணையினை மரபு வளர்ச்சி என்ற நிலையில் பொருத்திப் பார்த்து ஆய்க.

———————



Nesamony Memorial Christian College, Marthandam